# TNPSC GROUP I MAIN EXAM 2023

# MODEL EXAM – PAPER I

## கட்டாய தமிழ் தகுதித் தேர்வு

**பத்தாம் வகுப்புத் தரம்**

| காலஅளவு மூன்று மணி நேரம்<br>*Time Allowed: Three Hours* | மொத்த மதிப்பெண்கள்: 100<br>*Maximum Marks: 100* |
|---|---|

**வினாக்களுக்கான விதிமுறைகள்**

**வினாக்களுக்கு விடை எழுதும் முன் கீழ்க்காணும் விதிமுறைகளைக் கவனமாகப் படிக்கவும்:**

- அனைத்து வினாக்களுக்கும் விடை எழுதுக.
- வினா / வினாப்பகுதிகளுக்கான மதிப்பெண்கள் அவற்றின் எதிரே தரப்பட்டுள்ளன.
- விடைகள் தமிழில் (தமிழில் எழுத்தில்) மட்டுமே வேண்டும். அல்லது வினாத்தாளில் குறிப்பிட்டபடி எழுதுதல் வேண்டும்.
- எந்தெந்த வினாக்களில் சொற்களின் எண்ணிக்கையளவு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதன்படி விடை எழுதுதல் வேண்டும். குறிப்பிடப்பட்டிருக்கும் எண்ணிக்கையளவுக்கு மிக அதிகமாகவோ அல்லது குறைவாகவோ விடை அமைந்தால் மதிப்பெண்கள் குறைக்கப்படும். வினா-விடைக் கையேட்டில் எழுதாத பகுதி / பக்கங்கள் இருப்பின் அவற்றின் குறுக்கே கோடு இடவும்.

**QUESTION PAPER SPECIFIC INSTRUCTIONS**

**Please read each of the following instructions carefully before attempting questions:**

- **All questions are to be attempted.**
- **The number of marks carried by a question / part is indicated against it.**
- **Answers must be written in TAMIL (Tamil Script) unless otherwise directed in the question.**
- **Word limit in questions, wherever specified, should be adhered to and if answered in much longer or shorter than the prescribed length, marks may be deducted.**
- **Any page or portion of the page left blank in the Question-cm-Answer Booklet must be clearly struck off.**

**கேள்வி எண் 1** **15 மதிப்பெண்கள்**

**1. பின்வருவனவற்றுள் ஏதேனும் ஒன்று குறித்து 300 சொற்களில் கட்டுரை வரைக**

1. 'திருவள்ளுவர் கூறும் விருந்தோம்பல்' - கட்டுரை வரைக.
2. திருக்குறள் 'நீத்தார் பெருமை' மூலம் பற்று இல்லாதவர் பெருமையை எங்கனம் விளக்குகிறார்?
3. வள்ளுவர் கூறும் 'சான்றான்மை' குறித்து தொகுத்து எழுதுக.
4. 'மருந்து' என்ற அதிகாரத்தின் மூலம் உடல் நலன் பேண வள்ளுவர் கூறும் வழிமுறைகள் யாவை?
5. 'ஊழ்' குறித்து வள்ளுவர் கூறும் கருத்துகளைத் தொகுத்து எழுதுக.

**கேள்வி எண் 2** **10 மதிப்பெண்கள்**

**2. பின்வரும் பகுதியைக் கவனமாகப் படித்து, அதன் இறுதியில் உள்ள வினாக்களுக்கு சுருக்கமாகவும், தெளிவாகவும் சரியான விடை எழுதுக**

விக்ரம் சாராபாய் "இந்திய விண்வெளித் திட்டத்தின் தந்தை" என்று அழைக்கப்படுகிறார். ஆரியபட்டா என்ற முதல் செயற்கைக்கோள் ஏவுதலுக்குக் காரணமானவர். செயற்கைக்கோள் உதவியுடன் தொலைக்காட்சி வழியாக 24,000 இந்திய கிராமங்களில் உள்ள ஐம்பது இலட்சம் மக்களுக்குக் கல்வியை எடுத்துச் செல்ல உதவினார். இவரின் பெயரால் "விக்ரம் சாராபாய் விண்வெளி மையம்" திருவனந்தபுரத்தில் செயல்பட்டுவருகிறது. இங்கு, வானூர்தியியல் (Aeronautics), வான்பயண மின்னணுவியல் (Avionics), கூட்டமைப் பொருள்கள் (Composites), கணினி – தகவல் தொழில்நுட்பம் உள்ளிட்ட பல துறைகளில் ஆராய்ச்சிகளும் வடிவமைப்புகளும் மேற்கொள்ளப்படுகின்றன. இவருடைய முயற்சியால் இஸ்ரோ தொடங்கப்பட்டது. இந்தியாவின் 11 ஆவது குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய இந்திய அறிவியலாளர் அப்துல்கலாம் ஆவார். தமிழ்நாட்டின் இராமேசுவரத்தைச் சேர்ந்தவர் இவர். ஏவுகணை, ஏவுகணை ஏவு ஊர்தித் தொழில்நுட்ப வளர்ச்சியில் கலாம் காட்டிய ஈடுபாட்டினால் அவர் "இந்திய ஏவுகணை நாயகன்" என்று போற்றப்படுகின்றார். பாதுகாப்பு ஆராய்ச்சி மேம்பாட்டு நிறுவனத்திலும் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்திலும் பொறியாளராகப் பணியாற்றினார். இந்தியாவின் உயரிய விருதான பாரதரத்னா விருது பெற்றவர். இவர் தம் பள்ளிக் கல்வியைத் தமிழ்வழியில் கற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது.

1. **ஆரியபட்டா என்ற முதல் செயற்கைக் கோளை ஏவுதலுக்குக் காரணமானவர் யார்?**
2. **விக்ரம் சாராபாய் விண்வெளி மையம் எங்கு செயல்பட்டு வருகிறது?**
3. **யாருடைய முயற்சியால் இஸ்ரோ தொடங்கப்பட்டது?**
4. **"இந்திய ஏவுகணை நாயகன்" என்றழைக்கப்பட்டவர் யார்? ஏன்?**
5. **அப்துல் கலாம் அவர்கள் ஆற்றிய பணிகளைக் கூறுக?**

**கேள்வி எண்.3** **10 மதிப்பெண்கள்**

**3. கீழ்க்காணும் பகுதியை அதன் அளவில் மூன்றில் ஒரு பங்கு அளவில் சுருக்கி உங்கள் சொந்த நடையில் எழுதுக. தலைப்புத் தேவையில்லை**

மனித மூளையின் வியக்கத்தக்க படைப்புகள் தான் மனிதரின் இயற்கை மொழிகள். ஒரு குழந்தைக்கு அதனுடைய வளர்ச்சியில், நடக்கும் திறன் எவ்வாறு தானாகவே வளர்ச்சியடைகிறதோ, அவ்வாறே மொழித்திறனும் வளர்ச்சியடைகிறது. தனது கருத்துக்களை வளர்ச்சியடைகிறதோ, அவ்வாறே மொழித்திறனும் வளர்ச்சியடைகிறது. தனது கருத்துக்களை காலம் கடந்து, இடம் கடந்து நிலைத்து வைக்க மனித சமுதாயம் உருவாக்கிய தொழில்நுட்பமே எழுத்து மொழி. பானைகள், பாறைகள், கற்கள், ஓலைச்சுவடிகள் என்று பல ஊடகங்களில் மனிதன் தனது கருத்துகளை பொதிந்து வைக்கத் தொடங்கினான். அதன் இன்றைய வளர்ச்சியே, தட்டச்சு, அச்சு மற்றும் கணினி எழுத்துருக்கள் ஆகும்.

சுமார் 30 ஆண்டுகளுக்கு முன்னர் கணினியில் தமிழை உள்ளீடு செய்ய வசதி கிடையாது. தமிழ் எழுத்துருக்கள், விசைப்பலகைகள் உருவாக்கப்படவில்லை. பின்னர் மெல்ல மெல்ல தமிழ் உரையை ரோமன் எழுத்துக்களில் உள்ளீடு செய்து, அதைத் தமிழ் எழுத்துருக்களில் மாற்றும் வசதி உருவாக்கப்பட்டது. ஆதமி போன்ற மென்பொருட்கள் உருவாக்கப்பட்டன. தமிழ் எழுத்துக்களுக்கான எழுத்துருக்கள் உருவாக்கப்பட்டன.

இருப்பினும் தமிழ் எழுத்துருக்களை கணினியில் குறியேற்றம் செய்வதில் பல சிக்கல்கள் நீடித்தன. தமிழ் எழுத்துருக்களான குறியேற்றத்தில் தரப்படுத்தல் இல்லாமல் இருந்தது. ஒரு குறிப்பிட்ட தமிழ் மென்பொருளைக் கொண்டு தட்டச்சு செய்யப்பட்ட ஒரு தமிழ் ஆவணத்தை மற்றொரு தமிழ் மென்பொருளைக் கொண்டு வாசிக்கவோ, புதுப்பிக்கவோ இயலாத ஒரு நிலை நீடித்தது. இதற்கு அஸ்கி (ASCII) என்ற குறியேற்ற முறையும் ஒரு தடையாக அமைந்தது. தமிழ் விசைப்பலகைகளும் தரப்படுத்தப்படவில்லை.

இருப்பினும் தமிழில் இணையதளங்கள், வலைப்பூக்கள் தோன்ற ஆரம்பித்தன. அச்சில் இடம்பெற்ற அனைத்தும் கணினியில் இடம் பெற்றன. இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் ஒருங்குறி குறியேற்றம் (UNICODE, ENCODING) பன்னாட்டுக் கணினி நிறுவனங்களின் வணிக முயற்சியால் அறிமுகப்படுத்தப்பட்டன. தமிழுக்குத் தனியே ஒருங்குறிக் குறியேற்ற எண்கள் வழங்கப்பட்டன. இதன் பயனாக தற்போது மின்னணுச் சாதனங்களில் தமிழை உள்ளீடு செய்வதற்கான தடை எதுவும் கிடையாது. கைப்பேசியில் கூட தற்போது தமிழை உள்ளீடு செய்து அனைத்துப் பயன்பாடுகளையும் மேற்கொள்ளலாம். கல்வெட்டு, ஓலைச்சுவடி, தட்டச்சு, அச்சுப்பொறி, கணினி ஆகியவற்றில் இதுவரை நாம் பார்த்த தமிழ்மொழித் தொழில்நுட்பமே, காலம் கடந்து பயன்பட கணினியில் அச்சுருவாக்கம் செய்யப்பட்டு ஏற்றப்படுகிறது.

தற்போது தமிழ் இணையப் பல்கலைக் கழகம் ஓலைச்சுவடிகள், கல்வெட்டுகள் மற்றும் செப்புப் பட்டயங்களை ஒளிப்படமாக சேமித்து அனைவரும் அறியும் வண்ணம் செய்துள்ளது. இது உலகெங்கிலும் உள்ள தமிழர் மற்றும் தமிழர் அல்லாதோர் தமிழைக் கற்கவும், பட்டம் மற்றும் பட்டயப் படிப்பை இணைய வழியில் பயிலவும், அனைத்து தமிழ்நூல்களை தமிழில் இணைய வழியில் பதிவேற்றியும் தமிழை அடுத்த கட்டத்திற்கும் எடுத்து சென்றுள்ளது.

**கேள்வி எண் 4:** **10 மதிப்பெண்கள்**

**4. பின்வரும் சுருக்கக் குறிப்பிலிருந்து விரிவாக்கம் செய்தல் (300 வார்த்தைகளுக்கு மிகாமல்)**

விண்மீன்கள் - பிரபஞ்சம் - கிரகங்கள் - சூரியன் - நிலவு – நட்சத்திரங்கள் - வானியல் நூல் - புறநானூற்றுப்பாடல் - வானியல் ஆராய்ச்சியாளர்கள்.

**கேள்வி எண் 5:** **10 மதிப்பெண்கள்**

**5. பின்வரும் பகுதியை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து எழுதுக**

தமிழ்நாட்டில் முப்பதுக்கும் மேற்பட்ட இடங்களில் தமிழ் பிராமி கல்வெட்டுகள் கற்பாறைகளிலும் குகைவாழிடங்களிலும் காணப்படுகின்றன. சமணத் துறவிகள் இக்குகைகளைப் பெரும்பாலும் தமது வாழிடங்களாகக் கொண்டிருந்தனர். இயற்கையாக அமைந்த மலைக்குகைகளின் விளிம்பில், மழைநீர் வழிந்து வெளியேறுவதற்காகச் சிறிய பகுதியை வெட்டி கொடுங்கை அல்லது வாரி போன்று செதுக்கியிருந்தனர். அதற்குக் கீழேதான் பெரும்பாலான கல்வெட்டுகள் காணப்படுகின்றன. குகைகளின் உட்புறத்தில் வழுவழுப்பான படுக்கைகளைப் பாறைகளிலேயே செதுக்கி உருவாக்கியிருந்தனர். உலகியல் வாழ்வைத் துறந்து, குகைகளில் வாழ்ந்த துறவிகளுக்கு அரசர்களும் வணிகர்களும் இயற்கையாக அமைந்த குகைகளை வாழிடங்களாக மாற்றி உதவினர். தமிழ்நாட்டில் மாங்குளம், முத்துப்பட்டி, புகலூர், அரச்சலூர், கொங்கர்புளியங்குளம், ஜம்பை, மதுரை உள்ளிட்ட பல இடங்களில் உள்ள குகைவாழிடங்களில் தமிழ் பிராமி கல்வெட்டுகளை இன்றும் காணலாம். பெரும்பாலான குகைவாழிடங்கள் பண்டைக்கால வணிக வழிகளில் அமைந்துள்ளன.

APOLLO STUDY CENTRE

**கேள்வி எண் 6:** **10 மதிப்பெண்கள்**

**பின்வரும் பகுதியைத் தமிழில் மொழிபெயர்க்கவும்**

The folk songs of Tamilnadu have in them a remarkable charm just as we find in the folk songs of any other country. But what is special in these Tamil songs is, they not only possess a native charm and the aroma of the soil but have preserved in them a certain literary and artistic quality. This is so because the people who speak the language of these folk songs, the Tamils, have had a great historical past and a wonderful literary tradition. Folk songs are so old and yet so full of life that they are always new and progressively modern. These songs were born several centuries ago; they are being born every generation; they will be born and reborn over and over again!

**கேள்வி எண் 7:** **15 மதிப்பெண்கள்**

**அலுவலகக் கடிதம்**

**கொடுக்கப்பட்ட மூன்று வினாக்களில் ஏதேனும் ஒரு வினாவிற்கு 250 சொற்களுக்கு மிகாமல் விடையளிக்கவும்**

1. பகுதி நேர பயிற்றுநர்களுக்கு மதிப்பூதிய உயர்வு தொடர்பாக அனைவருக்கும் கல்வி இயக்கம் சார்பில் குறிப்பாணை ஒன்றை வரைக.
2. விளையாட்டுத் துறை சார்பில் மாவட்டங்கள் தோறும் ‘விளையாட்டு திடல்’ அமைத்திட வேண்டி திட்ட மதிப்பு அறிக்கை ஒன்றை வரைக.
3. உணவு விடுதியொன்றில் வழங்கப்பட்ட உணவு தரமற்றதாகவும் விலை கூடுதலாகவும் இருந்தது குறித்து உரிய சான்றுகளுடன் உணவுப் பாதுகாப்பு ஆணையருக்குக் கடிதம் எழுதுக.

**கேள்வி எண் 8:** **20 மதிப்பெண்கள்**

**a. கீழ்க்காணும் சொற்களை உமது சொந்த வாக்கியத்தில் அமைத்து எழுதுக**

1. ஆடம்பரம்
2. சில்லறை
3. சகிப்புத்தன்மை
4. எட்டாக்கனி

**b. பின்வரும் இணைச் சொற்களைப் பயன்படுத்தி ஒரே தொடர் அமைக்க**

1. தின்மை திண்மை
2. பொரி பொறி
3. சூல் சூள்
4. தாலி தாழி

**c. பிரித்து எழுதுக**

1. நளவெண்பா
2. கயன்முள்
3. தண்டளிர்பதம்
4. நாடொறும்

**d. எதிர்மறை வாக்கியமாக மாற்றி எழுதுக**

1. நான் புத்தகத்தைக் கிழித்தேன்
2. சான்றோர் பொது நலத்தையே நாடுவர்
3. கண்ணன் நீரை சிக்கனமாக பயன்படுத்தினான்.
4. நேற்று கிராமசபைக் கூட்டம் நடைபெற்றது.

**e. பிழை நீக்கி எழுதுக**

1. சுவறில் வரைய வன்னங்கல் வேண்டும்.
2. உளைத்து கழைத்ததால் படுத்து உரங்கினான்.
3. கார் பறுவத்தில் தானியங்கள் நண்கு விலைந்தன.
4. மண்ணுலகில் நல்லரம் காப்பவன் தேவற்களுக்கு விறுந்தாவான்.

APPOLLO STUDY CENTRE